சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 2012–2013 ஆம் ஆண்டு – புதிய 25 ஆதிதிராவிடர் நல பள்ளி/கல்லூரி விடுதிகள் துவங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந4) துறை

நந்தன, தை 5 திருவள்ளுவர் ஆண்டு 2044

அரசாணை (நிலை) எண். 4 நாள்.18.1.2013

படிக்கப்பட்டது

ஆணையர், ஆதிதிராவிடர் நலன் கடித எண்.த1/9404/2012 நாள்.9.5.2012 மற்றும் 29.5.12.

ஆணை:–

2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் போது புதியதாக 25 ஆதிதிராவிடர் நல விடுதிகள் துவங்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 2012–2013–ஆம் ஆண்டில் 1250 மாணவ/மாணவியர் பயன்பெறும் வகையில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் புதியதாக 25 மாணவர்/மாணவியர் விடுதிகள் துவங்க ஆணையர் ஆதிதிராவிடர் நலம் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் தம்முடைய கருத்துருவில், 25 புதிய விடுதிகள் துவங்குவதற்கு 97 இடங்களின் பெயர்களை பரிந்துரைத்து பட்டியலுடன் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். மேலும் அதனுடன் பொது மக்கள்/அரசியல் பிரமுகர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள்/ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து அரசுக்கு நேரடியாக அனுப்பப்பட்ட மனுக்களையும் ஆய்வு செய்து, அவசியம் கருதி கீழ்க்கண்ட 16 பள்ளி மாணவர்/மாணவியர் விடுதிகளும், 8 கல்லூரி மாணவர்/மாணவியர் விடுதிகளும் மற்றும் ஒரு ITI விடுதியும் (ஆக 25 விடுதிகள்) 2012–2013 –ஆம் ஆண்டு முதல் துவங்க அரசு ஆணையிடுகிறது.

**2012–2013 ஆம் ஆண்டு முதல் துவங்க உள்ள 25 விடுதிகளின் விவரம்**

**(16பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகள்)**

| வ. எண். | மாவட்டம் | விடுதி துவங்கப்படவுள்ள இடம் | மாணவர்/ மாணவியர் விடுதி |
|---|---|---|---|
| 1. | இராமநாதபுரம் | எஸ். கொடிக்குளம் | மாணவியர் விடுதி |
| 2. | நாமக்கல் | ராஜபாளையம் | மாணவர் விடுதி |
| 3. | ஈரோடு | அரச்சலூர் | மாணவர் விடுதி |
| 4. | கோயம்புத்தூர் | எஸ். புங்கம்பாளையம் | மாணவர் விடுதி |
| 5. | சிவகங்கை | கருமந்தக்குடி | மாணவர் விடுதி |
| 6. | சிவகங்கை | தேவகோட்டை | மாணவர் விடுதி |
| 7. | சேலம் | ஆத்தூர் | மாணவர் விடுதி |

| | | | |
|---|---|---|---|
| 8. | சேலம் | தோப்பூர் | மாணவர் விடுதி |
| 9. | பெரம்பலூர் | நெய்கொப்பை | மாணவர் விடுதி |
| 10. | கடலூர் | குமராட்சி | மாணவர் விடுதி |
| 11 | தூத்துக்குடி | பெரியசாமிபுரம் | மாணவர் விடுதி |
| 12. | திருநெல்வேலி | கடம்பன்குளம் | மாணவர் விடுதி |
| 13 | விழுப்புரம் | எஸ்.ஒகையூர் | மாணவியர் விடுதி |
| 14. | புதுக்கோட்டை | கல்லாக்கோட்டை | மாணவியர் விடுதி |
| 15. | புதுக்கோட்டை | சுப்ரமணியபுரம் | மாணவியர் விடுதி |
| 16 | புதுக்கோட்டை | விராலிமலை | மாணவியர் விடுதி |

(8 கல்லூரி மாணவர்/மாணவியர் விடுதிகள்

| வ. எண். | மாவட்டம் | விடுதி துவங்கப்படவுள்ள இடம் | மாணவர்/ மாணவியர் விடுதி |
|---|---|---|---|
| 1 | நீலகிரி | உதகமண்டலம் | மாணவியர் (ST) விடுதி |
| 2 | திருச்சி | திருச்சி | மாணவியர் விடுதி |
| 3. | திருப்பூர் | உடுமலைப்பேட்டை | மாணவியர் விடுதி |
| 4. | திருவாரூர் | நன்னிலம் | மாணவர் விடுதி |
| 5. | வேலூர் | திருப்பத்தூர் | மாணவர் விடுதி |
| 6. | வேலூர் | அரக்கோணம் | மாணவர் விடுதி |
| 7. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | மாணவர் விடுதி |
| 8. | சென்னை | சென்னை | மாணவியர் (ST) விடுதி |

(1 ஐ.டி.ஐ. மாணவர் விடுதி)

| வ. எண். | மாவட்டம் | விடுதி துவங்கப்படவுள்ள இடம் | மாணவர்/ மாணவியர் விடுதி |
|---|---|---|---|
| 1. | விழுப்புரம் | உளுந்தூர்பேட்டை | மாணவர் விடுதி |

3. மேலும், இப்பள்ளி கல்லூரி விடுதிகளுக்கு ரூ.9300–34800+ Grade Pay ரூ.4400 என்ற சம்பள விகிதத்தில் 25 பி.எட். பட்டதாரி காப்பாளர்/காப்பாளினி பணியிடங்களும், 4800–10000 Grade Pay 1300/– என்ற சம்பள விகிதத்தில் 25 சமையலர் பணியிடங்களும் மற்றும் 25 காவலர் / ஏவலர் பணியிடங்களும் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 2–ல் புதியதாக துவங்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 25 விடுதிகளுக்கு ஆண்டொன்றிக்குபணியாளர்களுக்கான சம்பளத்திற்காக ரூ.2,25,81,900/– (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து ஐந்து இலட்சத்து எண்பத்தொராயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) இதர தொடர் செலவினத்திற்காக ரூ.1,07,21,700/–ம் (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சத்து இருபத்தோராயிரத்து எழுநூறு மட்டும்) மற்றும் தொடராச் செலவினமாக ரூ.49,93,750( ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து தொன்னூற்று மூவாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும் ) ஆக மொத்தம் ரூ.3,82,97,350/– (ரூபாய் மூன்று கோடியே என்பத்திரண்டு இலட்சத்து தொன்னூற்று ஏழாயிரத்து மூன்னூற்று ஐம்பது மட்டும்) அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும் இந்நிதியாண்டிற்கான தொடரும்

செலவினம் ரூ.1,53,12,075/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி மூன்று இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து எழுபத்தைந்து மட்டும்) மற்றும் தொடரா செலவினம் ரூ.49,93,750/– (ரூபாய் நாற்பத்தி ஒன்பது இலட்சத்து தொன்னூற்றி மூன்றாயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்) சேர்த்து மொத்தம் ரூ.2,03,05,825/– (ரூபாய் இரண்டு கோடியே மூன்று இலட்சத்து ஐந்தாயிரத்து என்நூற்றி இருபத்தைந்து மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

“2225 ஆதிதிராவிடர். பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01 ஆதிதிராவிடர் நலன்– 277–கல்வி பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – **II** - மாநிலத் திட்டம்– **KD**- மாணவரில்லங்கள் ”

<u>துணை கணக்குத் தலைப்புகள்</u>

| வ.எண். | செலவின விவரம் | தொடர் செலவினம் | தொடராச் செலவினம் |
|---|---|---|---|
| 1 | 01. சம்பளங்கள்<br>01. அடிப்படை சம்பளங்கள்<br>(து.தொ.கு.2225 01 277KD 0110) | 54,81,250 | –– |
| 2. | 02 மருத்துவப்படி<br>(து.தொ.கு.2225 01 277KD 0129) | 37,500 | –– |
| 3. | 06 வீட்டுவாடகைப்படி<br>(து.தொ.கு.2225 01 277KD 0165) | 2,60,000 | –– |
| 4. | 08. நகர ஈட்டுப்படி<br>(து.தொ.கு.2225 01 277KD 0183) | 67,500 | –– |
| 5. | 03. அகவிலைப்படி<br>01. அகவிலைப்படி<br>(து.தொ.கு.2225 01 277KD 0316) | 35,62,875 | –– |
| 6. | 05. அலுவலகச்செலவுகள்<br>05. அறைகலன்<br>(து.தொ.கு.2225 01 277KD 0558) | –– | 25,75,000 |
| 7. | 06. வாடகை, கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை<br>(து.தொ.கு.2225 01 277KD 0610) | 3,75,000 | –– |

| | | | |
|---|---|---|---|
| 8. | 19 இயந்திரமும் சாதனமும்<br>01 வாங்குதல்<br>(த.தொ.கு.2225 01 277KD 1913) | -- | 3,63,000 |
| 9 | 24 00 பொருள்களும் வழங்கலும்<br>(த.தொ.கு.2225 01 277KD 2403) | 6,250 | 16,67,500 |
| 10 | 34 ஏனைய செலவுகள்<br>02 நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(த.தொ.கு.2225 01 277KD 3420) | -- | 2,32,000 |
| 11 | 46 உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகசாலைப் பொருள்கள்<br>(த.தொ.கு.2225 01 277KD 4607) | -- | 1,56,250 |
| 12 | 67உணவளிக்கும்/உணவுச் செலவுகள்<br>09 ஏனையவை<br>(த.தொ.கு.2225 01 277KD 6794) | 50,77,050 | -- |
| 13 | 99 பல்வகை<br>(த.தொ.கு.2225 01 277KD 9906) | 4,44,650 | -- |
| | மொத்தம் | 1,53,12,075 | 49,93,750 |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. தொடராச் செலவினத்தில் ஒவ்வொறு பள்ளி மற்றும் கல்லூரி விடுதிக்கு கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான செலவினம் அனுமதிக்கப்படுகிறது.

| தொடராச் செலவினம் | | | |
|---|---|---|---|
| வ.எண் | செலவின விபரம் | பள்ளி விடுதி | கல்லூரி விடுதி |
| 1 | அரவை இயந்திரம் | ரூ.8,000/- | ரூ.10,000/- |
| 2 | சமையல் பாத்திரம் | ரூ.20,000/- | ரூ.40,000/- |
| 3 | நூலக புத்தகங்கள் (ம) அலமாரிகள் | ரூ.10,000/- | ரூ.8,000/- |

| | | | |
|---|---|---|---|
| 4 | விடுதி அலுவலக அறைக்கலன் | ரூ.40,000/- | ரூ.40,000/- |
| 5 | சமையல் எரிவாயு இணைப்பு | ரூ.30,000/- | ரூ.30,000/- |
| 6 | 22 லிட்டர் குக்கர் | ரூ.5,000/- | ரூ.5,000/- |
| 7 | போர்வை (ரூ.125x50) | ரூ.6,250/- | ரூ.6,250/- |
| 8 | பாய் (ரூ.50x50) | ரூ.2,500/- | ரூ.2,500/- |
| 9 | வண்ண தொலைக்காட்சி பெட்டி | ரூ.4,000/- | ரூ.4,000/- |
| 10 | விளையாட்டு சாதனம் | ரூ.2,000/- | ரூ.2,000/- |
| 11 | மின்னனு எடை இயந்திரம் | -*** | ரூ.5,000/- |
| 12 | மாணவர்களுக்கான அறைக்கலன் | -*** | ரூ.1,75,000/- |
| | மொத்தம் | ரூ.1,27,750/- | ரூ.3,27,750/- |

16 பள்ளி விடுதிகளுக்கு ஓர் ஆண்டிற்கு ஏற்படும் தொடராச் செலவினம் (16x127750) ரூ 20,44,000

9 கல்லூரி விடுதிகளுக்கு ஓர் ஆண்டிற்கு ஏற்படும் தொடராச் செலவினம் (9x3,27,750) ரூ 29,49750

மொத்தம் ரூ. 49,93,750

8. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில் பணிபுரிவோர் அடிப்படை சம்பளம் மற்றும் விதிமுறைகளின் படி... பிற படிகளையும் பெற தகுதியுடைவர்கள் ஆவார்கள். மேலும் புதிதாக துவங்கப்படும் 25 விடுதிகளும் வாடகைக் கட்டத்தில் இயங்குவதற்கும் அனுமதியளித்து ஆணையிடப்படுகின்றது.

9. இது ஒரு 'புதுப்பணி' குறித்த (New Service) செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு-செலவு பொது I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து செலவு செய்ய தேவையான தொகைக்கு செயற்குறிப்பினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு-செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் 2012-2013 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைக்கான உரிய விளக்கக் குறிப்பினை (வரவு-செலவு பொது I)துறைக்கு அனுப்பி வைக்கும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 2-ல் கண்டுள்ள 25 புதிய விடுதிகளும் முறையாக துவங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண். 59313 நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)துறை நாள். 25.10.2012, அ.சா.கு.எண். 60415 /நிதி (மை.ம.ஆபி) துறை நாள். 27.10.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண். 1425 (ஆயிரத்து நானூற்று இருபத்தைந்து)ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தங்க கலியபெருமாள்.
அரசு செயலாளர்(பொறுப்பு)

பெறுநர்:
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35/6.
கணக்காய்வுத் தலைவர் (CAB), சென்னை–9.

நகல்:–
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர்(நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அமைச்சர் (ஆதிதிராவிடர்(ம)பழங்குடியினர் நலன்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை (CMPC)/(ஆதி(ம)பந), சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொ.I/வ.செ.பொ.II)துறை, சென்னை–9.
திட்டம் மற்றும் வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துணை, சென்னை–9.
அரசு செயலரின் தனிச்செயலர், ஆதிதிராவிடர் மற்றும்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1, ஆதிந2, ஆதிந3, ஆதிந7, ஆதிந8, ப.மே1, ப.மே2, க.மா.பா)துறை, சென்னை–9
இருப்புகோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. விஜயபாஸ்கரன்.
பிரிவு அலுவலர் 18/1/2013